உம் நாமம் சொல்லச் சொல்ல
என் உள்ளம் மகிழுதையா
என் வாழ்வில் மெல்ல மெல்ல
உம் இன்பம் பெருகுதையா

மாணிக்கத் தேரோடு
காணிக்கை தந்தாலும்
உமக்கது இணையாகுமோ
இந்த உலகமே வந்தாலும்
உறவுகள் நின்றாலும்
உமக்கது ஈடாகுமோ... ஆ ...ஆ

பால் என்பேன் தேன் என்பேன்
தெவிட்டாத அமுதென்பேன்
உம் நாமம் என்ன என்பேன்
மறை என்பேன் நிறை என்பேன்
நீங்காத நினைவென்பேன்
உம் நாமம் என்ன என்பேன்